**அரச ஈட்டு முதலீட்டு வங்கி - 2020**

---

## 1.1 அபிப்பிராயம்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (''வங்கி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு "slip control account" இல் ரூபா 1,871,997 தொகையான இணக்கம் செய்யப்படாத கடன் தொகையொன்று உள்ளது. | ஆவணச் சான்றுகள் கிடைக்காததால் இந்த நிலுவை பதிவழிக்கப்பட வேண்டும். | இணக்கம் செய்யப்படாத மீதியை சீர்செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

<table>
<tr><td>(ii)</td><td>2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட மூன்று தொங்கல் கணக்குகள் காணப்பட்டன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.<br><br><table><tr><th>போ.பே கணக்கு</th><th>மீதி</th></tr><tr><td>1/06/1102</td><td>4,309,124</td></tr><tr><td>1/06/1104</td><td>54,509</td></tr><tr><td>1/09/1618</td><td>15,783</td></tr><tr><td>மொத்தம்</td><td>4,379,416</td></tr></table></td><td>1/06/1102 – 4,309,124 இந்த மீதி 2020.12.31 இல் எங்கள் சேகரிப்பு கணக்குகளுக்கான வாடிக்கையாளர் வைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறதுடன் வங்கி (G/L) கணக்குகளை நாளதுவரையாக்குவதற்காக தொங்கல் கணக்குகளில் தற்காலிகமாக பதிவு செய்யப்பட்டது, விரிவான வங்கி கூற்றை பெற்ற பின்னர் இந்த மீதி 2021 சனவரி முதல் வாரத்தில் தீர்வு செய்யப்பட்டது.<br><br>1/06/1104 - 54,509 - இந்த மீதி 2021 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்தது.<br><br>1/09/1618 – தீர்வு செய்யப்பட வேண்டும்.</td><td>ஆண்டிறுதியில் வங்கியில் உள்ள அனைத்து தொங்கல் மீதிகளையும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.</td></tr>
</table>

## 1.6 பெவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2/22/4703 மற்றும் 2/22/4702 ஆகிய பேரேட்டுக் கணக்குகளிற்கான குறிப்புரையில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 1,563,966 மற்றும் ரூபா 1,233,723 தொகையான இரண்டு நீண்ட கால முற்பண மீதிகள் உள்ளன. | ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கிடைக்காததால் இந்த மீதிகள் பதிவழிப்பு செய்யப்பட வேண்டும் | நீண்ட கால முற்பண மீதியை சாத்தியமானளவு விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 1.6.2 கடன்கள் மற்றும் முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | EPF கடன் உட்பட மொத்தச் செயற்பாடற்ற கடன் முற்பணங்கள் 22.94 சதவீதமாகவும், EPF கடனைத் தவிர்த்து மொத்தச் செயற்பாடற்ற கடன் முற்பணம் 10.71 சதவீதமாகவும் 2020 ஆம் | 2021 திசெம்பர் 31 இல் மொத்த NPL விகிதம் 19.85% ஆக காணப்பட்டது.<br>தேறிய NPL - 16.55%<br>EPF ஐ தவிர்த்து மொத்த NPL - 9.19% | வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதத்தைக் குறைப்பதற்கு அறவீட்டு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல். |

ஆண்டில் காணப்பட்டன. இது தொழில்துறை விகிதமான முறையே 6.8 சதவீதம் மற்றும் 4.9 சதவீதத்தை விட அதிகமாகும்.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வங்கி 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,756,213 உழைக்கும் போதே செலுத்தும் வரியை (PAYE) சம்பளங்களில் இருந்து கழிப்பதற்குப் பதிலாக அதன் ஊழியர்களின் சார்பாக அதன் சொந்த நிதியிலிருந்து செலுத்தியுள்ளது. | கூட்டு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனையின் பிரகாரம் PAYE(APT) செலுத்தப்படுகிறது. | வங்கியின் உழைக்கும் போதே செலுத்தும் வரி தொடர்பாக “2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை” உடன் இணங்க வேண்டும். |
| (ii) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.i.இ பிரிவு, சபையானது முக்கிய இடர்களைக் கண்டறிந்து, வங்கியில் உள்ள இடர்களை விவேகத்துடன் முகாமை செய்வதற்கு பொருத்தமான முறைமைகளை அமுல்ப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான BCPDR ஐ வங்கி மேற்கொண்டிருக்காததுடன் 2020 இல் BIRMC கூட்டக் குறிப்புக்களில் மோசமான ஆவணங்கள் அவதானிக்கப்பட்டன. | எதிர்கால இணக்கப்பாட்டிற்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.i.இ பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (iii) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.i.உ பிரிவு, | AS 400 ஆனது தகவல் மற்றும் அறிக்கைகளை உருவாக்கும் | புதிய பிரதான முகாமைத்துவ முறைமையை கொள்வனவு | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதாவது வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை சபை மீளாய்வு செய்ய வேண்டும். | வகையில் தொழில்துறை தேவைப்பாட்டை எளிதாக்கவில்லை. | செய்வதற்கு வங்கி ஏற்பாடு செய்துள்ளது.<br><br>கேள்வி அழைப்பிற்கான செய்தித்தாள் விளம்பரம் 2021 திசெம்பர் 16 இல் வெளியிடப்பட்டதுடன் கேள்விகள் 2022 பெப்ரவரி 03 இல் மூடப்பட்டன. | 3.1.i.உ பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (iv) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.i.ஔ பிரிவு, அதாவது சபை ஒழுங்குமுறை சூழலைப் புரிந்துகொண்டு, வங்கி ஒழுங்குமுறையாளர்களுடன் செயற்திறனான உறவைப் பேணுவதை உறுதிப்படுத்த வேண்டும். | சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறையாளர்களிடம் அறிக்கையிடுவதற்கான கால எல்லையை வங்கியால் அடைந்துகொள்ள முடியாதிருந்தது. 2019 மற்றும் 2020 இல் வங்கியின் முன்னாள் ஆண்டறிக்கை. | எதிர்கால இணக்கப்பாட்டிற்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.i.ஔ பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (v) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.iii ஆம் பிரிவு, அதாவது சபையானது தவறாமல் கூட்டத்தை நடாத்த வேண்டியதுடன் சபைக் கூட்டங்கள் ஆண்டொன்றிற்கு குறைந்தது பன்னிரண்டு முறை அண்ணளவான மாத இடைவெளிகளில் நடத்தப்பட வேண்டும். | 2020 ஏப்ரல் முதல் சபைக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் 11 தடவைகள் மாத்திமே கூட்டங்கள் நடாத்தப்பட்டன. | 2020 சனவரியில் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தது, ஆனால் பணிப்பாளர் சபையின் தகுதி மற்றும் உரிமைக்காக CBSL அனுமதியைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால், கூட்டங்களை 2020 ஏப்ரல் 20 வரை நடாத்த முடியவில்லை.<br><br>CBSL அங்கீகாரத்தை பெற்ற பின்னர் சபையானது சபை | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.1.iii ஆம் பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூட்டங்களுக்காக தொடர்ந்து கூடி, 2020 ஆம் ஆண்டில் 11 கூட்டங்களை நடாத்துவதற்கு முகாமை செய்திருந்தது. | |
| (vi) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.2.i ஆம் பிரிவு சபையின் அமைப்பு, அதாவது சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 இற்கு குறைவாகவும் 13 இற்கு அதிகமாகவும் இருக்கக்கூடாது. | வங்கிச் சட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்ச பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஏழு (7) ஆக இருக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் உள்ள பணிப்பாளர்களின் உண்மையான எண்ணிக்கை ஐந்து (5) ஆக காணப்பட்டது. | குறித்துக்கொள்ளப்பட்டது. தற்போது இணங்கியுள்ளது. | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.2.i பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (vii) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.5.ix ஆம் பிரிவு, அதாவது தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது ஏனைய எந்தவொரு நிறைவேற்று கடமைகளையும் நேரடியாக மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. | CIA, உதவி முகாமையாளர் (கடன்) மற்றும் உதவி உள்ளக கணக்காய்வாளர் ஆகியோரின் நியமனக் கடிதங்கள் 2020 இல் தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. 2021 திசெம்பர் 31 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த விடயம் தொடர்பாக GA இடமிருந்து விளக்கம் கோரியுள்ளோம். | வங்கியின் நிறைவேற்றுக் கடமைகள் தலைவரால் மேற்கொள்ளப்படக்கூடாது. |
| (viii) | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.6.iii.இ பிரிவு, அதாவது மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழு, CEO மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றலை | CEO மற்றும் KMPs இன் செயலாற்றல் மதிப்பீட்டிற்காக இலக்குகள் தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் என்பவற்றை வங்கி கருத்தில் கொண்டிருக்காதை | எதிர்கால நடவடிக்கைகளுக்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இணங்கப்பட்ட KPIs இற்கு எதிராக KMPs இன் செயலாற்றலை கண்காணிப்பதன் | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி சட்ட பணிப்புரையின் 3.2.ii.இ பிரிவின் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு எதிராக அவ்வப்போது மதிப்பீடு செய்ய வேண்டும். | ம அவதானிக்கப்பட்டது. | மூலம் அவர்களின் செயலாற்றலை கண்காணிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 355,834,458 இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 419,073,544 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 63,239,086 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமான வரி செலவினம் மற்றும் நட்டக்கழிவு கட்டணம் என்பன அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

வங்கியின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 95.2 மில்லியன் அல்லது 1.6 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 1.2 பில்லியனால் அல்லது 3.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகும். வட்டிச் செலவினம் ரூபா 9.1 மில்லியன் அல்லது 0.23 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சந்தையில் வட்டி விகிதம் குறைவடைந்தமை முக்கிய காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கடன் உற்பத்திப்பொருள் வாரியான நட்டக்கழிவு கணிப்பீடு காரணமாக நட்டக்கழிவு கட்டணங்கள் ரூபா 138.7 மில்லியனால் அதிகரித்துள்ளன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

உரிமம் பெற்ற விசேட வங்கித் துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **விபரம்** | **துறை** | **வங்கி** | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | 2020 | 2020 | 2019 | 2018 | 2017 |
| இலாபத்தன்மை விகிதம் | | | | | |
| சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.59 | 6.09 | 7.73 | 4.82 | 3.62 |
| சராசரி சொத்துக்கள் மீதானதிரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 0.94 | 1.15 | 1.11 | 1.13 | 0.98 |
| தேறிய வட்டி எல்லை (சதவீதம்) | 3.2 | 4.24 | 4.52 | 4.72 | 4.66 |
| மூலதன போதுமை | | | | | |
| மொத்த தட்டு 1 மூலதன விகிதம் | 12.05 | 21.58 | 21.04 | 21.69 | 23.74 |
| மொத்த மூலதன விகிதம் | 15.36 | 22.67 | 21.77 | 22.23 | 24.29 |
| சொத்து தரம் | | | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணம் (EPF கடன்கள் | 6.8 | 22.94 | 21.21 | 22 | 19.37 |
| மொத்த செயற்பாடற்ற முற்பணம் (EPF கடன்கள் தவிர்ந்த) | 4.9 | 10.71 | 7.73 | 7.0 | 4.5 |
| திரவத்தன்மை விகிதங்கள் | | | | | |
| திரவத்தன்மை மேவுகை விகிதம் (சதவீதம்) | 59.52 | 116 | 121.05 | 83.91 | 86.88 |

i. 2020 இல் இலாபத்தன்மை குறைந்ததன் காரணமாக பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ROE) 1.64 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

ii. 2020 ஆம் ஆண்டிற்கான 4.24 சதவீத தேறிய வட்டி எல்லை 3.2 சதவீத உரிமம் பெற்ற விசேட வங்கி விகிதத்தை விட சற்று அதிகமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

iii. EPF கடன்கள் உள்ளடங்கிய வங்கியின் மொத்தச் செயற்பாடற்ற விகிதம் 6.8 சதவீத துறை விகிதத்தை விட மிக அதிகமாக உள்ளது. EPF கடன் வகையில் NPL விகிதம் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். எனினும், EPF கடன்கள் பணத்தை திரும்பப் பெறும் கடன்களாக உள்ளதுடன் மத்திய வங்கி மூலம் அறவிடப்பட முடியும். EPF கடன்கள் அற்ற மொத்தச் செயற்பாடற்ற கடன் விகிதம் 2020 இல் 10.71 சதவீதமாக உள்ளது, இது துறை விகிதத்தை விட 4.9 சதவீதம் அதிகமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கியின் கடன் பிரிவு 2016 செப்தெம்பர் 01 முதல் 2017 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் இரண்டு போலி தனியார் அமைப்புக்களின் ஊழியர்கள் என தங்களை அடையாளம் காட்டிய நாற்பத்தேழு (47) விண்ணப்பதாரிகளுக்கு ரூபா 66.34 மில்லியன் தொகையான கடன்களை வழங்கியிருந்தது. இரண்டு போலி அமைப்புக்களின் ஊழியர்களாக தங்களை அடையாளம் காட்டிய விண்ணப்பதாரர்கள் அந்தத் கடன்களுக்கு விண்ணப்பிக்கும் போது போலி ஆவணங்களை சமர்ப்பித்தது பௌிப்படுத்தப்பட்டது. மேற்படி கடனில் ரூபா 61,506,617 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மிகுதி கொடுப்பனவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கடன் வழங்குவதில் ஈடுபட்ட சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த தொகையை அறவீடு செய்வதற்கு குற்றவாளிகள் மீது தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் பொறுப்பான ஊழியர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 38,378,330 தொகையான UR கணக்கின் தற்காலிக மூடப்பட்ட நிலை இன்னும் | இந்த மீதிகள் 2021 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | வங்கியின் சீரான செயற்பாடுகளிற்காக கடன் நிர்வாகம் இவ் வகையான |

| | | | |
|---|---|---|---|
| | தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 72,103,281 தொகையான நீணடகால நிலுவை வாடிக்கையாளர் மீளளிப்பு மீதிகள் அவதானிக்கப்பட்டன. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தக் கணக்கின் மீதி ரூபா 50,739,909 வரை குறைவடைந்துள்ளது. | நீண்ட காலமாக நிலுவையாக உள்ள வாடிக்கையாளர் மீளளிப்பு மீதிகள் கூடிய விரைவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (iii) | வழங்கப்பட்ட கடன் தவணை காலம்தாழ்த்தி செலுத்துவதற்கான சட்ட உரிமையின் கீழ் கடன்கள் மற்றும் முற்பணங்களின் புதுப்பிக்கப்பட்ட முதிர்வு திகதிகள் முறைமையில் காணப்படவில்லை. | தற்போதைய முறைமை தவணைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடன்களை அறவீடு செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் முதிர்வு திகதியின் அடிப்படையில் அல்ல.<br><br>காலாவதியான திகதிதியை கடன் தவணை காலம்தாழ்த்தி செலுத்துவதற்கான சட்ட உரிமைகான காலப்பகுதியுடன் கணிப்பிடுவதற்கு வங்கி முறைமையை மாற்றும். | கடன்கள் மற்றும் முற்பணங்களின் புதுப்பிக்கப்பட்ட முதிர்வு திகதிகள் முறைமையில் இருக்க வேண்டும். |
| (iv) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் தொகுதியில் (portfolio) உள்ள PL மற்றும் NPL வகைப்படுத்தல் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | PL & NPL வகைப்படுத்தல் வாடிக்கையாளரின் நிலுவை நிலைமையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. | கடன் தொகுதியில் உள்ள PL மற்றும் NPL வகைப்படுத்தல் சரியாக இருக்க வேண்டியதுடன் அது நிதிப் பிரிவால் சரிபார்க்கப்பட வேண்டும். |
| (v) | வங்கியின் தகவல் தொழில்நுட்பத் துறையிலோ அல்லது நிதித் துறையிலோ தகவல் தொழில்நுட்பத் தரவுப் பிரித்தெடுப்பில் தரவு சரிபார்ப்புக் கட்டுப்பாட்டுப் புள்ளி (data validation control point) காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | IT பிரிவு இயன்றவரை சரிபார்ப்புக்களை செய்கிறது. | தகவல் தொழில்நுட்பத் துறை அல்லது நிதித் துறையில் IT தரவுப் பிரித்தெடுப்பில் தரவு சரிபார்ப்புக் கட்டுப்பாட்டுப் புள்ளியை வங்கி அறிமுகப்படுத்த வேண்டியதுடன் அது சம்பந்தப்பட்ட அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 நிலையான சொத்து பதிவேடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பின்வரும் தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>– பொருளிருப்பு இலக்கங்கள்<br>– சொத்து விற்பனையாளர்<br>– அகற்றப்பட்ட சொத்துகளின் பட்டியல்<br>– சொத்தின் தற்போதைய இடம் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள பொருளிருப்பு இலக்கம் இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது - அகற்றப்படும் சொத்துக்களின் தனியான பட்டியல் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும். | பொருளிருப்பு இலக்கங்களின் விபரங்கள், சொத்து விற்பனையாளர், அகற்றப்பட்ட சொத்துக்களின் பட்டியல் மற்றும் சொத்து இருக்கும் இடம் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் பேணப்பட வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்து மெய்மையாய்வு மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு என்பவற்றின் கணக்கிணக்க அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்து மெய்மையாய்வு அறிக்கையுடன் சேர்த்து வழங்கப்படும். | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்து மெய்மையாய்வு மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு என்பவற்றின் கணக்கிணக்க அறிக்கை வங்கியின் கணக்குகளுடன் சேர்த்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.4 வங்கியின் தகவல் முறைமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மாற்றக் கோரிக்கைப் படிவத்தை வங்கி பேணியிருக்காததுடன் பின்னர் கடன் தவணைப்பணம் காலம்தாழ்த்தி செலுத்தும் உரிமைக்காக முறைமைகளிற்கு மாற்றக் கோரிக்கை காணப்பட்டது. மேலும் 2020 இல் UAT சோதனைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. | வங்கி சோதனைக்கான பொறிமுறையை கொண்டிருந்த போதிலும் ஆவணப்படுத்தல் செயன்முறை 2021 ஒக்தோபரில் மாத்திரமே தொடங்கப்பட்டது. | வங்கி மாற்றக் கோரிக்கைப் படிவம் மற்றும் UAT சோதனைப் படிவத்தை பேண வேண்டியதுடன் அவை முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | 2020 ஆம் ஆண்டிற்கான மாற்றப் பதிவை வங்கி பௌதீக ரீதியாகவோ அல்லது அமைப்புமுறையாகவோ | முக்கிய வங்கி தீர்வுக்கான பெறுகை செயன்முறையானது அமைச்சர்களின் பெறுகை குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கியானது பௌதீக ரீதியாக அல்லது முறைமையில் மாற்ற பதிவை பேண |

| | | | |
|---|---|---|---|
| | பேணவில்லை. | 2021-ஏப்ரல்-23 ஆம் திகதிய CBSL கடிதம் (குறிப்பு: 02/19/306/0001/006) மூலம், SMIB இன் முன்மொழியப்பட்ட இணைப்பு காரணமாக, முக்கிய வங்கித் தீர்வுகளை கொள்வனவு செய்வதற்கும் தணிப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மூலதனச் செலவினங்களைச் செலவிட வேண்டாம் என அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. சபை வழிகாட்டல்களின் பிரகாரம் அடிப்படை மைய வங்கி தீர்வு அமுல்ப்படுத்தப்படும். அதன் பிரகாரம் அடிப்படை CBS ஐ கொள்வனவு செய்வதற்கு புதிய கேள்வி செயன்முறை தொடங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (iii) | AS 400 இற்கான அணுகல் Matrix கிடைக்கவில்லை. | சமர்ப்பிக்கப்படும். | AS 400 இற்கான அணுகல் Matrix ஐ வங்கி உருவாக்க வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முக்கிய வங்கி தீர்வை கொள்வனவு செய்வதற்கான செயன்முறை 2016 யூனில் தொடங்கப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதி வரை புதிய முக்கிய வங்கி தீர்வை வங்கியால் கொள்வனவு செய்ய முடியவில்லை. | முக்கிய வங்கி தீர்வுக்கான பெறுகை செயன்முறையானது, அமைச்சர்களின் பெறுகை குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2021-ஏப்ரல்-23 ஆம் திகதிய CBSL கடிதம் (குறிப்பு: 02/19/306/0001/006) மூலம், SMIB இன் முன்மொழியப்பட்ட இணைப்பு காரணமாக, முக்கிய வங்கித் தீர்வுகளை கொள்வனவு செய்வதற்கும் தணிப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மூலதனச் செலவினங்களைச் செலவிட வேண்டாம் என அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. சபை வழிகாட்டல்களின் பிரகாரம் அடிப்படை மைய வங்கி தீர்வு அமுல்ப்படுத்தப்படும். அதன் பிரகாரம் அடிப்படை CBS ஐ கொள்வனவு செய்வதற்கு புதிய கேள்வி செயன்முறை தொடங்கப்பட்டுள்ளது. | வங்கிக்கான முக்கிய வங்கி தீர்வை விரைவில் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

**கணக்காய்வு விடயம்**

வங்கியின் பதவியணி நிலைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 467 மற்றும் 369 ஆக காணப்பட்டனர். இதன் விளைவாக 2020.12.31 இல் உள்ளவாறு 98 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் சீரான செயற்பாட்டை பாதிக்கும் பின்வரும் முக்கிய முகாமைத்துவ பதவிநிலைகள் வெற்றிடமாக உள்ளமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

| தொழில் நிலை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | நிரப்பப்பட்ட பதவிகள் | வெற்றிடங்கள் |
| --- | --- | --- | --- |
| பொது முகாமையாளர் | 1 | 1 | 0 |
| பிரதி பொது முகாமையாளர் (கடன்) | | 1 | 0 |
| பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) | 3 | 0 | |
| பிரதி பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) | | 0 | 2 |
| உதவி பொது முகாமையாளர் (கடன்) | | 0 | |
| உதவி பொது முகாமையாளர் (நிதி) | | 1 | |
| உதவி பொது முகாமையாளர் (சட்டம்) | | 1 | |
| உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 10 | 1 | 5 |
| உதவி பொது முகாமையாளர் (அறவீடுகள்) | | 1 | |
| உதவி பொது முகாமையாளர் (HR & L) | | 1 | |

**முகாமைத்துவ கருத்துரை**

வங்கியின் முன்மொழியப்பட்ட கிளைகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப வங்கியின் பதவியணியினர் முதலில் வடிவமைக்கப்பட்ட போதிலும் வங்கியின் குறைந்தபட்ச ஒழுங்குமுறை மூலதனத்தை அடையும் வரை புதிய கிளைகளைத் திறப்பதற்கான அனுமதியை CBSl நிறுத்தி வைத்துள்ளது, வெற்றிடங்களை நிரப்புதல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

வங்கியின் சீரான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

| | | | |
|---|---|---|---|
| உதவி பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) | | 0 | |
| உதவி பொது முகாமையாளர் (கிளை செயற்பாடு) | | 0 | |
| உதவி பொது முகாமையாளர் (மதிப்பீடு) | | 0 | |
| உதவி பொது முகாமையாளர் (கடன்-விநியோகம் மற்றும் கண்காணிப்பு) | | 0 | |
| தலைமை உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| தலைமை முகாமையாளர் (கடன்) | | 2 | |
| தலைமை முகாமையாளர் (கிளை செயற்பாடு) | | 1 | |
| தலைமை முகாமையாளர் (HR&L) | | 1 | |
| தலைமை முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) | | 1 | |
| தலைமை முகாமையாளர் (சட்டம்) | 12 | 0 | 5 |
| தலைமை முகாமையாளர் (இணக்கம்) | | 1 | |
| தலைமை முகாமையாளர் (மதிப்பீடு) | | 1 | |
| தலைமை முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | | 0 | |
| தலைமை முகாமையாளர் (அறவீடுகள்) | | 0 | |
| சிரேஷ்ட கணக்காளர் | 2 | 0 | 2 |
| சிரேஷ்ட முகாமையாளர் - சந்தைப்படுத்தல் | 1 | 0 | 1 |

| | | | |
|---|---|---|---|
| சிரேஷ்ட கிளை முகாமையாளர் | 24 | 10 | 1 |
| கிளை முகாமையாளர் | | 13 | |
| சிரேஷ்ட முகாமையாளர்-மதிப்பீடு | | 3 | |
| முகாமையாளர்-மதிப்பீடு | 12 | 2 | 0 |
| உதவி முகாமையாளர் - மதிப்பீடு | | 7 | |
| சிரேஷ்ட முகாமையாளர் - சட்டம் | | 0 | |
| முகாமையாளர் - சட்டம் | 18 | 5 | 2 |
| உதவி முகாமையாளர் - சட்டம் | | 11 | |
| சிரேஷ்ட முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் | | 1 | |
| முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் | 4 | 0 | 3 |
| உதவி முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் | | 0 | |
| சிரேஷ்ட முகாமையாளர் - கடன் | | 2 | |
| முகாமையாளர்- கடன் | 35 | 4 | 5 |
| உதவி முகாமையாளர் - கடன் | | 24 | |
| தனிப்பட்ட முகாமையாளர் சிரேஷ்ட முகாமையாளர் - HRD | 1 | 0 | 1 |